## கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# பால்வளம்

## மானியக் கோரிக்கை எண்.8

## அறிவிப்புகள்
## 2024 – 2025


**த.மனோ தங்கராஜ்**

பால்வளத்துறை அமைச்சர்

## 1. 2024–25 ஆம் ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு SS பால்கேன்கள், பால் அளவை உபகரணங்கள், பதிவேடுகள் மற்றும் பால் பரிசோதனை கருவிகள் ஆகியவை வழங்கப்படும்.

புதிதாக பதிவு செய்யப்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு துருவுறா எஃகு பால்கேன்கள், பால் அளவை உபகரணங்கள், பதிவேடுகள் மற்றும் பால் பரிசோதனை கருவிகள் ஆகியவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய செலவில் வழங்கப்படும்.

**2. பசுந்தீவன பற்றாக்குறையை கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.100 இலட்சம் செலவில் பசுந்தீவன புல் கரணைகள் வழங்கப்படும்.**

பால் உற்பத்தி செலவைக் குறைக்கவும், உற்பத்தி செய்யும் பாலின் தரத்தை அதிகரிக்கவும், மாவட்ட ஒன்றியங்களின் செலவில் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனம் வளர்ப்பதற்கு புல் கரணைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 3. பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டத்தின் கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு மற்றும் இதர நிதியுதவிகள் உயர்த்தி வழங்கப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் விபத்தினால் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.2.5 இலட்சத்தில் இருந்து ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இரண்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை ரூ.25,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தியும், ஒரு பெண் குழந்தைக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ரூ.30,000 லிருந்து ரூ.60,000 ஆக உயர்த்தியும் வழங்கப்படும். மேலும், ஈமச்சடங்கு தொகை ரூ.5,000 லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தியும் வழங்கப்படும். விபத்தில் ஊனமுறும் பால் உற்பத்தியாளர்களுக்கு ஓர் உறுப்பை இழந்தவருக்கு ரூ.75,000 லிருந்து ரூ.1 இலட்சமாகவும், இரண்டு உறுப்புகளை இழந்தவர்களுக்கு ரூ.1,75,000 லிருந்து ரூ.2.25 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலநிதி திட்டத்தில், சந்தாவாக பால் ஊற்றும் உறுப்பினர்களிடமிருந்து மாதம் 10 ரூபாயும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் தொடர்புடைய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து தலா ஒரு ரூபாய் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

## 4. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து டானிக் (Nutraceuticals) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படும்.

கறவை மாடுகளில் பொதுவாக உண்டாகும் மடிவீக்க நோய், செரிமான கோளாறுகளால் ஏற்படும் பால் உற்பத்தி குறைவு மற்றும் மருத்துவ செலவுகளால் பால் உற்பத்தியாளர்களுக்கு கணிசமான நிதி இழப்பு ஏற்படுகிறது.

மருந்துகளின் பயன்பாட்டைக் குறைப்பதற்காக, ஊட்டச்சத்து டானிக் வழங்குவதன் மூலம் கறவை மாடுகளின் நோய் எதிர்ப்புச் சக்தி மேம்படும்.

இத்திட்டத்திற்கு, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மூலம் ஊட்டச்சத்து டானிக் கொள்முதல் செய்யயப்பட்டு, ஒரு நாளைக்கு 250 லிட்டர்களுக்கு மேல் பால் கொள்முதல் செய்யும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வழியாக நியாயமான விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்யப்படும்.

**5. களப் பணியாளர்களான கால்நடை மருத்துவர்கள், விரிவாக்க அலுவலர்கள், கிராம நல ஊழியர்கள் போன்ற 3000 பணியாளர்களுக்கு பாரம்பரிய கால்நடை மூலிகை மருத்துவ பயிற்சிகள் வழங்கப்படும்.**

கால்நடை மருத்துவத்தில், எதிர் உயிரிகள், வலி நிவாரணிகள் போன்ற மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மருந்துகளை, அதிகமாகவோ அல்லது முறையின்றி தொடர்ந்து பயன்படுத்தும்போது, சில அவசர கால சிகிச்சையின்போது அம்மருந்துகள் செயலிழந்து போகின்றது. இந்நிலை கால்நடைகளை மட்டுமின்றி மனிதர்களையும் பாதிக்கின்றது.

எனவே, 3000 களப் பணியாளர்களான கால்நடை மருத்துவர்கள், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் கிராம நல ஊழியர்களுக்கு கால்நடை மூலிகை மருத்துவத் துறையில் உள்ள வல்லுனர்கள் மூலம் ரூ.90 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் ஒன்றியத்தின் பங்கு மற்றும்

50 சதவிகிதம் இணையத்தின் பங்கு) பயிற்சிகள் அளிக்கப்படும்.

இதனால், மனிதர்கள் மற்றும் கறவை மாடுகளில் ஏற்படும் மருந்து எதிர்ப்பு மற்றும் செயலிழப்புகள் தவிர்க்கப்படுகின்றது. மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் கால்நடை சிகிச்சை மருத்துவச் செலவுகளும் வெகுவாக குறைக்கப்படும்.

**6. தரமான பால் கொள்முதல் மற்றும் பால் உற்பத்தியை உறுதி செய்யும் நோக்கில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கடலூர், திருவண்ணாமலை, தர்மபுரி மற்றும் கரூர் ஒன்றியங்களில் ரூ.234 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக்கூடங்கள் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (N P D D) மூலம் நிறுவப்படும்.**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கிராமப்புறத்தில் கொள்முதல் செய்யப்படும் மற்றும் ஒன்றிய பால்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால்பொருட்களின் தரத்தினை உறுதி செய்திட, புதியதாக உருவாக்கப்பட்ட கடலூர், திருவண்ணாமலை, தர்மபுரி மற்றும் கரூர் ஒன்றியங்களில் ரூ.234 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக்கூடங்கள் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப்படவுள்ளன.

இதன் மூலம் நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

## 7. 23 ஒன்றிய மற்றும் அனைத்து இணைய பால்பண்ணைகளின் ஆய்வுக்கூடங்கள் ரூ.931.50 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் மேம்படுத்தப்படும்.

23 மாவட்ட மற்றும் இணைய பால் பண்ணைகளின் மூலம் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, இணையம் மற்றும் 23 மாவட்ட ஒன்றிய பால்பண்ணைகளின் ஆய்வுக்கூடங்கள் ரூ.931.50 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் உபகரணங்கள் நிறுவி தரம் உயர்த்தி மேம்படுத்தப்படும்.

ஆவின் நிறுவனம் பால் மற்றும் பால் பொருட்களை FSSAI, AGMARK மற்றும் BIS போன்ற பல்வேறு ஒழுங்குமுறை ஆணையங்களின் விதிகளுக்குட்பட்டு உற்பத்தி செய்து வருகிறது. அனைத்து பால் பொருட்களும் உற்பத்தியின் பல்வேறு

நிலைகளில் தர பரிசோதனைகளுக்கு ஈடுபடுத்தப்படுகின்றன. பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதற்காக இந்த ஆய்வகங்கள் அனைத்தும் மேம்படுத்தப்பட்ட ஆய்வுக்கருவிகள் கொண்டு நவீனமாக்கப்பட்டு வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் பரிசோதனை செய்யும் ஆய்வகங்கள், நவீன பரிசோதனை கருவிகள் மற்றும் பிற ஆய்வக கருவிகள் கொண்டு மேம்படுத்தப்படும்.

## 8. கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், ஒன்றிய மற்றும் இணைய ஊழியர்களுக்கு ரூ.95 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் வழங்கப்படும்.

தரமான மற்றும் தூய பால் உற்பத்தி, பொது சுகாதாரம் ஆகியன குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், ஒன்றிய மற்றும் இணைய ஊழியர்களுக்கு பயிற்சி நிறுவனங்கள், பயிற்சி கூடங்கள் மூலம் உள் மற்றும் வெளி மாநிலங்களில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த ஆண்டு ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு தூய பால் உற்பத்தி பயிற்சி மற்றும் கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், ஒன்றிய மற்றும் இணைய ஊழியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

**9. முதற்கட்டமாக புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், திருப்பத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் (ERP & AMCS) பணிகள் ரூ.14.20 கோடி மதிப்பீட்டில் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் செயல்படுத்தப்படும்.**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் செயல்பாடுகளை கணினி மயமாக்குவது தற்போதைய காலகட்டத்திற்கு இன்றியமையாததாகும். முதற்கட்டமாக புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், திருப்பத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்குட்பட்ட 600 சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குவதற்கான (ERP & AMCS) பணிகள் ரூ.14.20 கோடி மதிப்பீட்டில் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

மேற்படி திட்டத்தால் கிராமப்புற சங்கம், மாவட்ட ஒன்றியம் மற்றும் இணையத்தின் அனைத்து செயல்பாட்டு தரவுகளை உடனடியாக பெறவும், அனைத்து பணிகளையும் கண்காணித்திடவும் இயலும்.

**10. 150 தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களில் முதற்கட்டமாக ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் பால் பகுப்பாய்வு (கலப்படம்) கருவிகள் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (NPDD) நிறுவப்படும்.**

பால் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்திற்கான விலையை பால் ஊற்றிய உடனே (Spot Acknowledgement) பால் உற்பத்தியளார்களுக்கு வழங்குவதற்கும், தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையத்தில் பெறப்படும் பாலில் உள்ள கலப்பட பொருட்களை (யூரியா, ஃபார்மலின், சோப்பு, அம்மோனியா, சல்பேட், போரிக் அமிலம், ஹைட்ரஜன் பெராக்சைடு, சர்க்கரை, உப்பு, சாலிசிலிக் அமிலம், மெலமைன்) கண்டறிவதற்கும், 150 தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களில் ரூ. 6.50 கோடி மதிப்பீட்டில் பால் பகுப்பாய்வு கருவிகள் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்ட நிதி மற்றும் மாவட்ட ஒன்றிய நிதி பங்களிப்புடன் நிறுவப்படும்.

**11. பால் கொள்முதல், பாலின் தரம் மற்றும் பால் விநியோகம் ஆகியவற்றிற்கு உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்குவதற்கு ஏதுவாக 500 தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களில் மென்பொருள் நிறுவப்பட்டு பால் கொள்முதல் செயல்பாடுகள் Cloud Based Connectivity மூலம் கண்காணிக்கப்படும்.**

தொகுப்பு பால் குளிர்விப்பான்களின் செயல்பாடுகளான பால் கொள்முதல் செய்தல், பகுப்பாய்வு செய்தல், குளிரூட்டுதல் மற்றும் பால் டேங்கர்கள் மூலம் விநியோகம் செய்தல் ஆகியவற்றை மாவட்ட ஒன்றிய அளவிலும், மாநில அளவிலும் கண்காணிப்பதற்கு ஏதுவாக 500 தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களில் தானியங்கி பால் கொள்முதல் முறை - Automatic Milk Collection System (AMCS) எனும் மென்பொருள் ஒன்றிய செலவில் நிறுவப்பட்டு கண்காணிக்கப்படும். இதன் மூலம் தரமான பால் கொள்முதல் செய்யப்படுவது மற்றும் உடனடி ஒப்புகை சீட்டு (Spot Acknowledgement) பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவது உறுதி செய்யப்படும்.

**12. பால் உற்பத்தியாளர்கள் குறித்த விபரங்கள், அவர்களின் கறவை மாடுகள் குறித்த விபரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தியாளர்கள் பயிரிடும் பசுந்தீவனத்தின் அளவு ஆகிய தரவுகள் ஆன்ட்ராய்டு செயலி மூலம் சேகரிக்கப்படும்.**

கிராம அளவில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவைகளை நன்கு அறிந்து அவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் திட்டங்களை தீட்டவும், பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பால் உற்பத்தியாளர்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்யும் விதமாக தரவுகளின் அடிப்படையில் திட்டங்களை செயல்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட தரவுகள் ஆன்ட்ராய்டு செயலி மூலம் சேகரிக்கப்படும். மேற்கூறிய திட்டம் முதற்கட்டமாக அந்தந்த ஒன்றியங்களின் செலவில் செயல்படுத்தப்படும்.

**13. சிவகங்கை ஒன்றியத்தின் தற்போதுள்ள பால்பாக்கெட் குளிர்பதன அறையின் கையாளும் திறன் 20,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக ஒன்றியத்தின் சொந்த நிதியை பயன்படுத்தி உயர்த்தப்படும்.**

சிவகங்கை ஒன்றியம், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 90,000 லிட்டர் பாலை விநியோகித்து வருகிறது. தற்போது சிவகங்கை ஒன்றியத்தின் பால்பாக்கெட் குளிர்பதன அறையின் கையாளும் திறன் 20,000 லிட்டராக உள்ளது. எனவே, பால் விற்பனையை அதிகரிக்கவும் நுகர்வோர்களுக்கு தரமான பாலை விநியோகிக்கவும் தற்போதுள்ள பால் பாக்கெட் குளிர்பதன அறையின் கையாளும் திறன் 20,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக ஒன்றியத்தின் சொந்த நிதியை பயன்படுத்தி உயர்த்தப்படும்.

மேற்கண்ட பால்பாக்கெட் குளிர்பதன அறை விரிவாக்கத்தில் குளிரூட்டும் அலகு மற்றும் சேமிப்பு அறை ஆகியவை அடங்கும். மேலும் 15 மெ.டன் வெண்ணெய்யை சேமிக்கும் அலகு ஒன்றும் இத்துடன் நிறுவப்படும்.

## 14. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்க சிறப்பு கால்நடை பராமரிப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

இராமநாதபும் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் செயல்படுகின்றன. இங்கு உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கோடு 100 சதவிகித செயற்கைமுறை கருவூட்டல் வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்விரு மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கன்றுகள் மற்றும் கறவைகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் உரிய காலங்களில் தொடர்ந்து வழங்கப்படும். இம்மாவட்டத்தில் உள்ள கறவை மாடுகளுக்கு உயர்ரக விந்து குச்சிகள் கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்படும்.

மேலும் கறவை மாடுகள் அனைத்திற்கும் தாது உப்புகள், வைட்டமின்கள், தீவன உப பொருட்கள் ஆகியவை 100 சதவிகித மானியத்தில் வழங்கப்படும். புதிதாக கன்று ஈன்ற கறவை மாடுகளுக்கு புறவழி கொழுப்பு உப தீவனம் வழங்கப்படும். கறவைகளின் பால் உற்பத்தி திறன் பாதிக்கப்படாமல் இருக்க கறவை மாடுகளை தாக்கும் புற ஒட்டுண்ணி தடுப்பு மருந்துகள் வழங்கப்படும். மேற்கூறிய திட்டம் ரூ.150 இலட்சம் செலவில் ஒன்றியத்தின் பொது நிதி மூலம் செயல்படுத்தப்படும்.

## 15. நாமக்கல் ஒன்றியத்தில் பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய பால்வள வாரியத்தின் (NDDB) "ஒன்றிய புத்தாக்க திட்டத்தின்" கீழ் மேம்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக புதியதாக துவங்கப்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு தேவையான பால் பரிசோதனை கருவிகள், பால் சேகரிப்பு கேன்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும். பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்திக்கு ஏற்ப ஊக்கத்தொகை மற்றும் மானியத்துடன் கூடிய கால்நடை தீவனம் வழங்கப்படும். மேலும் புதியதாக துவக்கப்படவுள்ள பால்பண்ணையின் திறனை அதிகரிக்க உட்கட்டமைப்பு வசதிகள், பால் மற்றும் பால்பொருட்களின் விற்பனையை அதிகரிக்க உட்கட்டமைப்பு வசதிகளை தேசிய பால் வள வாரிய நிதிப் பங்களிப்புடன் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 16. மாவட்ட ஒன்றிய மற்றும் சென்னை மாநகர பால்பண்ணைகளுக்கு ISO 22000 சான்றிதழ் பெறப்படும்.

ஆவின் நிறுவனம் நவீன உற்பத்தி முறைகளை மேம்படுத்தி மிகுந்த தரத்துடன் கூடிய பால் மற்றும் பால் பொருட்களை வழங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள ஆவின் பால் பண்ணைகள், பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியில் உணவு பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி வருகிறது. ஆவின் நிறுவனத்தில், அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர், திருவண்ணாமலை பால் பவுடர் பால் பண்ணை, அம்பத்தூர் பால் உபபொருட்கள் பால் பண்ணை, சேலம் மற்றும் மதுரை பால் பண்ணைகள் உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பின் ISO 22000 சான்றிதழ் பெற்று உற்பத்தியினை மேற்கொண்டு வருகிறது. மேலும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பால் பண்ணைகளுக்கும் டிசம்பர் 2024 இறுதிக்குள் ISO 22000 சான்றிதழ் பெறுவதற்கான திட்ட பணிகள் செயல்படுத்தப்படும்.

## 17. மாவட்ட ஒன்றியங்களுக்கு சொந்தமான காலி நிலத்தில் இயந்திரமயமாக்கபட்ட நவீன விவசாய முறைகளை பயன்படுத்தி மாதிரி கால்நடை பண்ணை நிறுவுதல்.

மாவட்ட ஒன்றியங்களில் உயர்ரக கலப்பின பசுக்கள் மற்றும் முர்ரா கலப்பின எருமைகள் கொண்ட மாதிரி பால் பண்ணைகள் அமைக்கப்படும்.

இது பால் உற்பத்தியாளர்களிடையே சிறிய மற்றும் பெரிய பால் பண்ணைகள் தொடங்க தூண்டுகோலாய் அமைவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தையும், வருமானத்தையும் அதிகரிக்க வழிவகை செய்யும்.

ஒன்றியங்களில் உள்ள நிலம் மற்றும் பிற வளங்களை திறம்பட பயன்படுத்தி மக்காச்சோளம், உளுந்து, வேலிமசால் (ஹெட்ஜ் லூசர்ன்) மற்றும் அசோலா போன்ற பல்வேறு வகையான பசுந்தீவனங்கள் ஒன்றிய நிலங்களில் பயிரிடப்படுவது பால் உற்பத்தியாளர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும்.

## 18. புதிதாக பால் பண்ணை தொழில் துவங்க விரும்பும் தொழில் முனைவோருக்காக இரண்டு பால் பண்ணை தொழில் வளர்ச்சி மையம் அமைத்தல்.

பால் பண்ணை தொழிலில் தொழில் முனைவோராக விரும்பும் விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் முதல் முறை தொழில் துவங்குவோர் ஆகியோருக்கு தேவைப்படும் தகுந்த தொழிற்பயிற்சி, ஆதார நிதி உதவி வழங்கிட பால் பண்ணை தொழில் வளர்ச்சி மையங்கள் தமிழ்நாட்டில் இரு இடங்களில் துவங்கப்பட உள்ளது.

இவ்வாறு தோற்றுவிக்கப்படும் பால் பண்ணை தொழில் வளர்ச்சி மையங்களில் கால்நடை வளர்ப்பு, பசுந்தீவன உற்பத்தி, பால் பண்ணை தொழிலை திறம்பட கையாளுவதற்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும்.

இவ்விரு மையங்கள் ஒன்றியங்களின் சொந்த நிதியின் மூலம் தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் நிறுவப்படும்.